**அக்டோபர்: 30**

## சபையில் நடந்த அற்புதங்கள்.

**வாசிக்க: அப்போஸ்தலர் 5:12-20**

அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலோமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள். ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள். திரளான புருஷர்களும் ஸ்திரிகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேயசமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து, அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள். கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத்திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து; நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.




நாம் கிபி முதலாம் நூற்றாண்டில் பிறந்த ஆதிச்சபையின் வளர்ச்சியை குறித்து தியானித்து கொண்டிருக்கிறோம். தேவன் மகத்துவமான அற்புதங்களை செய்த அந்த சமயத்தில் தானே, பிரதான ஆசாரியரும், அவரோடு இருந்த சதுசேயரும் பொறாமையடைந்து, அப்போஸ்தலரை சிறைபிடித்து, நைய்ய புடைத்து, மிரட்டி இனி இயேசுவின் நாமத்தை சொல்லக் கூடாது என சொல்லி அனுப்பினர். ஆனால் அப்போஸ்தலரோ மிக தெளிவாக இருந்ததால் நாங்கள் சரீரத்தை அழிக்கிற மனிதருக்கா அல்லது சரீரத்தையும் ஆத்துமாவையும் பாதாளத்தில் அழிக்கவல்ல தேவனுக்கு கீழ்படிய வேண்டும்..? எனக்கூறி வெளியே வந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தனர். தேவன் மகிமையான அற்புதங்களை செய்து தம் ஊழியரை உற்சாகபடுத்தி தைரியப்படுத்தினார். இதைகண்ட மதத்தலைவர்கள் மறுபடியும் அவர்களை சிறையில் அடைத்தார். அன்று இரவே தேவதூதன் வந்து அவர்களை விடுதலை செய்து மறுபடியும் சுவிசேஷம் சொல்ல வைத்தார். அப்போஸ்தலர் தேவன்மேல் வைத்த பாசம் அவர்களை தொடர்ந்து சுவிசேஷம் சொல்லவைத்தது. தேவன் அவர்கள் மேல் வைத்த பாசம் அவர்களுக்கு அற்புத அதிசயங்களை செய்யவைத்தது. இதுதான் சுவிசேஷ வல்லமை. குட்டீஸ் நீங்க என்ன செய்ய போகீறீங்க. ..? சுவிசேஷம் சொல்வீங்களா. ...?

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. ரோமர் 1:16

**<u>ஜெபம்</u>**

பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, உங்க சுவிசேஷத்தின் வல்லமையை கேட்கவைத்தமைக்கு நன்றி.  எங்க விசுவாசத்தை வர்திக்கபண்ணி உதவி செய்யுங்கப்பா. இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

